R.DIS No. 306/2021
RNI TC.No. TNTAM 24241/22.7.2021

# தின மடை

DINA MADAI MORNING TAMIL DAILY PAPER
தமிழ் காலை நாளிதழ்

volume - 01 | Issue - 119 | 11.01.2022 | Tuesday | Chennai | Page - 4 | Price - Rs.5/-

# மக்கள் கண்காணிப்பகம் அலுவலகத்தில் சிபிஐ சோதனை

## சிறுபான்மை மக்கள் நல கட்சி மாநில பொதுசெயலாளர் ஜெபசிங் கண்டனம்

**சென்னை, ஜன.11–**

சிறுபான்மை மக்கள் நல கட்சி மாநில பொதுசெயலாளர் ஜெபசிங் அறிக்கையில் கூறியிருப்பது.

தமிழகத்தில் கடந்த 1982 ம் ஆண்டு முதல் தொடர்ந்து இன்று வரை எந்த ஒரு சமரசமும் இல்லாமல் மனித உரிமைகளுக்கு என்று பல்வேறு வழக்குகளை அரசாங்கத்திற்கு பொதுமக்களுக்கும் உண்மை நிலையை தெரியப்படுத்துகிற மற்றும் நீதியை பெற்று தருகிற ஒரு உன்னதமான பணியை திரு.ஹென்றி டிபேன் தலைமையில் செய்து வரும் நிறுவனம் தான் மக்கள் கண்காணிப்பகம்,



சிறுபான்மை மக்கள், குழந்தைகள் உரிமைகள், மாற்றுதிறனாளிகள், போன்ற பல்வேறு மக்களின் அடிப்படை பிரச்சனைகளில் தீர்வு கண்டதில் மக்கள் கண்காணிப்பகத்தின் பங்கு மகத்தானது. பல்வேறு மனித உரிமை மீறல்களை தேசிய மனித உரிமை ஆணையத்திலும், மாநில மனித உரிமை ஆணையத்திலும், மற்றும் உயர்நீதிமன்றங்களிலும் அதிகமான வழக்குகளை பதிவு செய்து வெற்றி பெற்ற அமைப்பு.

2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சோதனையின் அடிப்படையில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சிபிஐ சோதனை நடத்தி இருப்பது வழக்கை திசை திரும்பும் நடவடிக்கை ஆகும்.

எந்த சோதனை செய்தாலும் மனித உரிமை ஆர்வலர்களை மிரட்டும் நோக்கமாகவே இச்சோதனை நடைபெற்றுள்ளது. இது போன்ற சோதனைகளால் மனித உரிமை ஆர்வலர்களை முடக்கிவிட முடியாது என்பதையும் ஒன்றிய அரசு நடத்திய சிபிஐ சோதனைக்கு சிறுபான்மை மக்கள் நல கட்சி சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்ளவதாக பொதுசெயலாளர் ஜெபசிங் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.